செய்தி வெளியீடு எண்: 171 நாள்: 27.02.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.2.2019) தலைமைச் செயலகத்தில், 2018–19ஆம் கல்வியாண்டில் 15 லட்சத்து 18 ஆயிரம் மாணவ, மாணவியர்களுக்கு 1,340 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக 7 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள்.

தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்புகளுக்கான புதிய பாதையினை ஏற்படுத்திட, இன்றைய உலகில் மாணவ சமுதாயத்தினருக்கு மடிக்கணினி ஒரு இன்றியமையா கல்விச் சாதனமாக உள்ளது என்பதை அறிந்து, ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் வாழ்கின்ற பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவ, மாணவியர்களும் வளர்ந்து வரும் உலகளாவிய தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியில் வெற்றி பெற்றிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2011 அன்று திருவள்ளூர், காக்களூரில் நடைபெற்ற அரசு விழாவில் தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ், சிறப்பு திட்ட செயலாக்கத் துறை மூலமாக 2011–12ஆம் ஆண்டு முதல் 2017–18 ஆம் ஆண்டு வரை 37,88,528 மாணவ, மாணவியர்களுக்கு 5,552 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

2018–19ஆம் ஆண்டு, முதற்கொண்டு பன்னிரெண்டாம் வகுப்பில் வழங்கப்பட்டு வந்த மடிக்கணினிகளை ஓராண்டுக்கு முன்னதாக பதினொன்றாம் வகுப்பிலேயே வழங்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு முடிவெடுத்ததின் அடிப்படையில், 2018–19ஆம் ஆண்டில் பதினொன்றாம் வகுப்பு படிக்கின்ற 5.12 லட்சம் மாணாக்கர்கள் உட்பட, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கின்ற மாணாக்கர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளில் முதலாமாண்டு படிக்கும் மாணாக்கர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் மாற்றுத்திறனாளி பள்ளிகளில் பதினொன்றாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் பயிலும் மாணாக்கர்கள், என மொத்தம் 15.18 லட்சம் மாணாக்கர்களுக்கு 1,340 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான விலையில்லா

மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தினை துவக்கி வைக்கும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 7 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம். மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி, ஊராட்சித் துறை மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திரு.பிரதீப் யாதவ், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவன மேலாண்மை இயக்குநர் திரு.எம். விஜயகுமார், இ.ஆ.ப., பள்ளிக் கல்வித் துறை இயக்குநர் முனைவர் வி.சி. இராமேஸ்வரமுருகன், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை இயக்குநர் முனைவர் கே. இராதாகிருஷ்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**